# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண் 13
## 2026, ஆகஸ்ட் 17, திங்கட்கிழமை
## ஆடி 32, திருவள்ளுவர் ஆண்டு – 2057

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

**"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு**
**ஐந்துடன் மாண்டது அமைச்சு."**

(அஞ்சாமையும், குடிபிறப்பும், காக்கும் திறனும், கற்றறிந்த அறிவும், முயற்சியும் ஆகிய இவ்வைந்தும் திருந்தப்பெற்றவரே அமைச்சர்.)

1. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் பாராட்டு:–**

தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், அண்ணல் அம்பேத்கர், வீரமங்கை வேலுநாச்சியார், மக்கள் சேவகர் அஞ்சலை அம்மாள் ஆகியோரை கொள்கைத் தலைவர்களாக ஏற்று, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற உன்னதக் கோட்பாட்டை தனது அரசியல் சித்தாந்தமாகக் கொண்டு, மதச்சார்பற்ற சமூக நீதியைக் காக்கும் உண்மையான மக்கள் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்தப் பொற்கால அரசு பொறுப்பேற்று, இன்றுடன் நூறு நாட்களை கம்பீரமாக நிறைவு செய்துள்ளது.

அரசின் இந்த முதல் நூறு நாட்கள் என்பது, நாட்காட்டியில் கடந்து செல்லும் வெறும் நாட்கள் அல்ல; இது தமிழக வரலாற்றில் புதியதொரு மாற்றத்தின் நூறு நாட்கள் ஆகும். வாக்குறுதி என்பது, தேர்தலுக்கான வார்த்தை அல்ல: அது மக்களுக்கான பொறுப்பு என்கிற உணர்வுடன் செயல்படும் இந்த அரசு, மக்களின் பேராதரவோடு பொறுப்பேற்ற முதல் நாளிலிருந்தே, மக்களின் நாடித் துடிப்பை அறிந்து, புதிய சிந்தனைகளுடன் களமிறங்கி, தனது முதல் 100 நாட்களில் பல்வேறு துறைகளில் செயல்படுத்தியுள்ள பணிகள் பாராட்டுக்குரியவை.

ஏழை, எளிய மக்களின் நலன் காக்கும்வகையிலும், பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும்வகையிலும், இளைஞர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் நோக்கிலும், பெண்களின் பாதுகாப்பிற்காக 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படை', ஒவ்வொரு குடும்பத்திற்கும் '200 யூனிட் வரையிலான இலவச மின்சாரம்', கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றிருந்த சுமார் '6,000 கோடி ரூபாய் பயிர்க் கடன் தள்ளுபடி', வீடற்ற ஏழை மக்களுக்கு தரமான வீடுகளைக் கட்டித் தரும் நோக்கில் அறிவிப்பு செய்துள்ள 'வெற்றி வீடு திட்டம்', 'அண்ணன் சீர் திட்டம்', 'சிங்கப் பெண்கள் வலிமைப்படுத்தும் திட்டம்', 'வெற்றித் திறன் பயிற்சித் திட்டம்', 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்' போன்ற பல அறிவிப்புகளின்மூலம், இது மக்களுக்கான அரசு என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிரூபித்துள்ளார்கள்.

'வளமான தமிழ்நாடு; வலிமையான தமிழ்நாடு; சமத்துவமான தமிழ்நாடு; ஊழலற்ற தமிழ்நாடு' என்ற எதிர்காலக் கனவுக்கு, முதல் நூறு நாட்களில் வலுவான அடித்தளத்தை அமைக்கும்வகையில், ஆட்சிக் கட்டிலில் ஏறியவுடனேயே, விளம்பர வெளிச்சத்தைத் தேடாமல், ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முதன்மையான கோப்புகளில் கையெழுத்திட்ட அந்தப் பொன்னான கரம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடையது.

...2

இந்த அரசு பொறுப்பேற்றது முதல், 'அரசியல் அனுபவம் இல்லாதவர்கள்; ஆட்சி கவிழ்ந்துவிடும்; இது காகிதக் கப்பல்' என்று ஏளனம் செய்தவர்கள், ஏகடியம் பேசியவர்கள், பகல் கனவு கண்டவர்கள், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நூறு நாள் கடின உழைப்பால், இன்று மக்கள் ஆதரவு என்னும் பெருங்கடலில் திக்குத் தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிற காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

இந்தக் குறுகிய காலகட்டத்திற்குள், தமிழ்நாட்டில் மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பைக் காக்கும்வகையிலும், தமிழக மக்களின் நீண்டகால எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும்வகையிலும், ஊழலற்ற, நேர்மையான மற்றும் வெளிப்படைத்தன்மையான நிர்வாகத்தை வழங்கிவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விதைக்கப்பட்டுள்ள திட்டங்களின் விதைகள், வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியாகவும், இளைஞர்களின் வேலைவாய்ப்பாகவும், பெண்களின் சுயமரியாதையாகவும், விவசாயிகளின் வளமாகவும், மாணவர்களின் கல்வி வாய்ப்பாகவும், பொது மக்களின் நல்வாழ்வாகவும் மலரும் என்பதில் எள்ளளவும் நமக்கு ஐயமில்லை.

சட்டமன்றத்தில் மாற்றுக் கருத்து கொண்டவர்களையும் இன்முகத்தோடு வரவேற்று, அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கு இடம் தராமல், ஜனநாயகம் மற்றும் சட்டமன்ற மரபுகளைப் புதுப்பித்து, அரசியலில் ஒரு புதிய நாகரிகமான பண்பை இந்த 100 நாட்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நாம் கண்டோம்.

திரை உலகிலும் சரி, மக்கள் மன்றத்திலும் சரி, தொட்டதெல்லாம் துலங்கச் செய்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று 'நூறு நாள்' சாதனை கடந்து, 'நூற்றாண்டு போற்றும்' பல சாதனைகளைப் படைக்கப் போகிறார் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்கப் போவதில்லை.

"நூறு நாளில் சாதித்துக் காட்டிய வேந்தனே–இன்னும்

நூற்றாண்டு பேசும் சரித்திரம் படைப்பாய்!

பகைவர் சூழ்ச்சிகள் தூள் தூளாக–மக்கள்

படை பலத்தோடு என்றும் வெல்வாய்"

என்ற வரிகளுக்கு இணங்க, இன்னும் பல சாதனைத் திட்டங்களை தமிழக மக்களுக்கு வழங்கி, தமிழகத்தின் உரிமைகளை மீட்டெடுத்து, நமது மாநிலத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றும் தங்களின் மக்கள் பணி தொய்வின்றித் தொடர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அவரது அமைச்சரவைக்கும் இந்த அவையின் சார்பாகவும், தமிழக மக்கள் சார்பாகவும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

2. <u>சிறப்பு கவன ஈர்ப்புகள் :–</u>

**(i) "கோயம்புத்தூரில் அமுதன் என்ற கல்லூரி மாணவரும், திருவொற்றியூரில் தனுஷ் என்ற பள்ளி மாணவனும் இறந்தது குறித்து"**

சட்டமன்றப் பேரவை விதி 55–ன் கீழ் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின், திரு. ஆர். காமராஜ், முனைவர் அ. கணேஷ்குமார், திரு. எம். போஜராஜன், திரு. ஆர். செல்லசுவாமி, திரு. ட்டி. இராமச்சந்திரன் மற்றும் முனைவர் (திருமதி) தாரகை கத்பட் ஆகியோர் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

திரு. எ.வ. வேலு அவர்கள் தனது கருத்தைத் தெரிவித்து வெளிநடப்பு செய்தார் அவரைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

...3

மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விளக்கமளித்தார்கள்.

**(ii) "தேனி மாவட்டம், மேகமலை மலைகிராம மக்கள் பிரச்சனை குறித்து"**

சட்டமன்றப் பேரவை விதி 55-ன் கீழ் திரு. ஆ. மகாராஜன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. ஆர். செல்லசுவாமி, திரு. ட்டி. இராமச்சந்திரன் மற்றும் திரு. பிஎல்ஏ. ஜெகநாத் மிஸ்ரா ஆகியோர் அரசின் கவனத்தை ஈர்த்தார்கள்.

மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விளக்கமளித்தார்கள்.

3. <u>முக்கிய அறிவிப்பு</u>

கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றால், உறுப்பினர் கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்ல வேண்டும், அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதேனும் அறிக்கை அளித்தால், அந்த அறிக்கையின்மீது இரண்டு கேள்விகள் மட்டும்தான் கேட்க முடியும். இதுதான் விதி.

4. <u>பேரவைக்கு ஓர் அறிவிப்பு</u>

2026-2027-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Rajendra Vishwanath Arlekar, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants for the Financial Year 2026-2027. "

5. <u>2026-2027-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்</u>

2026-2027-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

<u>கோரிக்கை எண்.19 – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை</u>

"மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை எண்.19-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 22,436,84,19,000/-, மூலதனக் கணக்கில் ரூ.918,41,93,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர் :-

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. பி.கே. சேகர்பாபு | 28. | திரு. எஸ். ஆஸ்டின் |
| 2. | டாக்டர் வை. முத்துராஜா | 29. | திரு. தி.மு. இராசேந்திரன் |
| 3. | திரு. ஐ.பி. செந்தில் குமார் | 30. | திரு. கா. கருணாநிதி |
| 4. | திரு. எ.வ. வேலு | 31. | திரு. ரா. இளங்கோ |
| 5. | திரு. ஆர். வைத்திலிங்கம் | 32. | திரு. ஆர். காமராஜ் |
| 6. | திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் | 33. | திரு. S. அம்பேத்குமார் |
| 7. | திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் | 34. | திரு. எஸ்.எம். சுகுமார் |

8. திரு. G.V. மார்க்கண்டேயன்
9. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா
10. திரு. ஆ. குட்டி (எ) சுதாகர்
11. டாக்டர் கலை கதிரவன்
12. திரு. ஈ. ராஜா
13. திரு. அ.செ. வில்வநாதன்
14. முனைவர் அ. கணேஷ்குமார்
15. திரு. ச. சிவகுமார்
16. திரு. நத்தம் இரா. விசுவநாதன்
17. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
18. திரு. ட்டி. இராமச்சந்திரன்
19. முனைவர் கோவி. செழியன்
20. திருமதி த. லதா
21. திரு. ஆர். செல்லசுவாமி
22. திரு. A.P. ஜெயசங்கரன்
23. திரு. ஆ. அருண்மொழிதேவன்
24. திரு. வே. சம்பத்குமார்
25. திரு. க. வைத்திலிங்கம்
26. திரு. P. ஹரிபாஸ்கர்
27. முனைவர் பால் மனோஜ் பாண்டியன்
35. திரு. கோ. அரி
36. திரு. சூரியனூர் அ. சந்திரன்
37. திரு. க. கார்த்திகேயன்
38. திருமதி லீமாரோஸ் மார்டின்
39 திரு. மு. திராவிடமணி
40. முனைவர் (திருமதி) சௌமியா அன்புமணி
41. திரு. ச. வெற்றிவேல்
42. திரு. க. மாரிமுத்து
43. திரு. ஓ.எஸ். மணியன்
44. திரு. சி.வெ. கணேசன்
45. திரு. அர. சக்கரபாணி
46. திரு. ஜி.ஆர். வசந்தவேல்
47. திரு. துரை. சந்திரசேகரன்
48. திரு. சிவ. வீ. மெய்யநாதன்
49. திரு. கா. அண்ணாதுரை
50. திரு. சு. பழனிசாமி
51. திரு. நிவேதா எம். முருகன்
52. திரு. எஸ்.பி. வேலுமணி
53. திரு. பி.எஸ். சீனிவாசன்

<u>கோரிக்கை எண்.41 – வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை</u>

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கை எண்.41–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,816,97,57,000/–, மூலதனக் கணக்கில் ரூ.7,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,78,82,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர் :–

1. திரு. பி.கே. சேகர்பாபு
2. டாக்டர் வை. முத்துராஜா
3. திரு. ஐ.பி. செந்தில் குமார்
4. திரு. எ.வ. வேலு
5. திரு. ஆர். வைத்திலிங்கம்
6. திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்
7. திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்
8. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா
9. டாக்டர் கலை கதிரவன்
10. திரு. அ.செ. வில்வநாதன்
11. திரு. கா. கருணாநிதி
12. முனைவர் அ. கணேஷ்குமார்
13. திரு. ச. சிவகுமார்
14. திரு. நத்தம் இரா. விசுவநாதன்
25. திரு. எஸ். ஆஸ்டின்
26. திரு. தி.மு. இராசேந்திரன்
27. திரு. ரா. இளங்கோ
28. திரு. ஆர். காமராஜ்
29. திரு. S. அம்பேத்குமார்
30. திரு. எஸ்.எம். சுகுமார்
31. திரு. கோ. அரி
32. திரு. க. கார்த்திகேயன்
33. திரு. மு. திராவிடமணி
34. முனைவர் (திருமதி) சௌமியா அன்புமணி
35. திரு. க. மாரிமுத்து
36. திரு. ச. வெற்றிவேல்
37. திரு. ஓ.எஸ். மணியன்
38. திரு. ஆ. குட்டி (எ) சுதாகர்

15. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
16. திரு. ட்டி. இராமச்சந்திரன்
17. முனைவர் கோவி. செழியன்
18. திருமதி த. லதா
19. திரு. ஆர். செல்லசுவாமி
20. திரு. A.P. ஜெயசங்கரன்
21. திரு. P. ஹரிபாஸ்கர்
22. திரு. வே. சம்பத்குமார்
23. திரு. க. வைத்திலிங்கம்
24. முனைவர் பால் மனோஜ் பாண்டியன்
39 திரு. சி.வெ. கணேசன்
40. திரு. அர. சக்கரபாணி
41. திரு. துரை. சந்திரசேகரன்
42. திரு. சிவ. வீ. மெய்யநாதன்
43. திரு. கா. அண்ணாதுரை
44. திரு. சு. பழனிசாமி
45. திரு. நிவேதா எம். முருகன்
46. திரு. எஸ்.பி. வேலுமணி
47. திரு. பி.எஸ். சீனிவாசன்

<u>கோரிக்கை எண். 51 – இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு</u>

"இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மானியக் கோரிக்கை எண்.51–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,713,13,64,000/–, ஆகியவற்றுக்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன் மொழிந்தனர் :–

1. திரு. பி.கே. சேகர்பாபு
2. டாக்டர் வை. முத்துராஜா
3. திரு. எ.வ. வேலு
4. திரு. ஆர். வைத்திலிங்கம்
5. திரு. எஸ். ஆஸ்டின்
6. திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்
7. திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்
8. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா
9. திரு. ஆ. குட்டி (எ) சுதாகர்
10. திரு. நிவேதா எம். முருகன்
11. திரு. அ.செ. வில்வநாதன்
12. திரு. கா. கருணாநிதி
13. முனைவர் அ. கணேஷ்குமார்
14. திரு. ச. சிவகுமார்
15. திருமதி த. லதா
16. திரு. நத்தம் இரா. விசுவநாதன்
17. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
18. திரு. ட்டி. இராமச்சந்திரன்
19. திரு. வே. சம்பத்குமார்
20. திரு. தி.மு. இராசேந்திரன்
21. திரு. ஆர். காமராஜ்
22. திரு. S. அம்பேத்குமார்
23. திரு. எஸ்.எம். சுகுமார்
24. திரு. கோ. அரி
25. திரு. மு. திராவிடமணி
26. திரு. க. கார்த்திகேயன்
27. திரு. ச. வெற்றிவேல்
28. திரு. க. மாரிமுத்து
29. திரு. துரை. சந்திரசேகரன்
30. திரு. சு. பழனிசாமி

மேற்காணும் மானியக் கோரிக்கைகள் மற்றும் வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதத்தில் கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்:–

1. திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்

...6

6. <u>பேரவை விதி 110–இன் கீழ் அறிக்கை</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–இன் கீழ் அறிக்கை ஒன்றினை பேரவைக்கு அளித்தார்கள்.

<u>பயிர்க்கடன் தள்ளுபடி குறித்து</u>

**"தமிழக மக்கள் நம் உயிர் என்றால், தமிழக விவசாயிகள் நம் உயிர்நாடி"**

உலகில் ஜாதி, மதம், இனம், மொழி என அனைத்து வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டு நடைபெறும் தொழில் என்றால், அது விவசாயத் தொழில் மட்டுமே. உலகின் ஒரு மூலையில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள், உலகின் மற்றொரு மூலையில் உள்ள மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கிறது. எந்த நாடு உழவுத் தொழிலை மதித்து, விவசாயிகளுக்கு உரிய பாதுகாப்பையும், ஆதரவையும் வழங்குகிறதோ, அந்த நாட்டில்தான் மக்கள் வளமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழமுடியும்.

தமிழக வெற்றிக் கழக அரசு, பல்வேறு நிதி நெருக்கடிகளின் மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றாலும், பதவியேற்ற 15 நாட்களுக்குள் விவசாயிகளின் கடன்சுமையைக் குறைக்க, கடந்த 25–5–2026 அன்று குறு, சிறு மற்றும் இதர விவசாயிகள் பெற்றிருந்த பயிர்க்கடனில் 50 ஆயிரம் ரூபாய் வரையிலான கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் பல்வேறு விவசாய அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பான கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து, நிதிநெருக்கடியான சூழ்நிலையிலும், விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை மட்டும் கருத்தில்கொண்டு, குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயிகளுக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை முழுத் தள்ளுபடி செய்ய அறிவிக்கப்பட்டதை உயர்த்தி, ரூபாய் 75 ஆயிரம் வரை கடன் பெற்றவர்களுக்கு முழுத் தொகையையும் ரூபாய் 75 ஆயிரத்திற்கும் மேல் கடன் பெற்றவர்களுக்கு ரூபாய் 35 ஆயிரமும் தள்ளுபடி செய்ய அறிவிக்கப்பட்டு, அதன்மூலம் 14.44 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.5,932.23 கோடி அளவிலான கூட்டுறவுப் பயிர்க்கடன் தள்ளுபடி செய்து, 19–6–2026 அன்று ஆணையிடப்பட்டது. இதில் 31–7–2026 வரை ரூ.5,267 கோடி விடுவிக்கப்பட்டு, 13.34 இலட்சம் விவசாயிகளின் கணக்கில் வரவும் வைக்கப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில் மாநிலம் முழுவதுமுள்ள விவசாயச் சங்க அமைப்புகளின் பிரதிநிதிகள் பயிர்க்கடன் தள்ளுபடியை அதிகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துக் கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து, 7–8–2026 அன்று விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகள், மாண்புமிகு மூத்த அமைச்சர்கள் மற்றும் துறைச் செயலாளர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், அவர்களின் கோரிக்கைகள் விரிவாக பரிசீலிக்கப்பட்டன.

கடந்த காலங்களில் பயிர்க்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டாலும், அரசால் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய தொகை 4–5 ஆண்டுகால இடைவெளியில் செலுத்தப்பட்டு வந்துள்ளது. 2021–ஆம் ஆண்டில் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை, 2021 முதல் 2026 வரையான காலத்தில் அரசால் 12 தவணைகளாக கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

ஆனால், அந்தக் கால அவகாசம் நமது அரசுக்குத் தற்போது இல்லை. இந்திய ரிசர்வ் வங்கியின் 28–11–2025 ஆம் தேதியிட்ட கடிதத்தில், அரசு கடன் தள்ளுபடி திட்டங்களுக்கான செயல்பாட்டு நடைமுறைகளின்படி, பயிர்க்கடன் தள்ளுபடிக்கான முழுத்தொகையையும் அரசானது 45 முதல் 60 நாட்களுக்குள் கூட்டுறவு வங்கிகளுக்கு முழுமையாக செலுத்த வேண்டுமென்ற வழிமுறை நடைமுறையில் வந்துள்ளது. இந்த வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு அரசின் நிதிநிலை மற்றும் நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும்,

இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்பட்ட பயிர்க்கடன்களுக்குப் பின்வரும் கூடுதல் தள்ளுபடியை வழங்கிட அரசு முடிவு செய்துள்ளது. 75,000 ரூபாய் வரை பெற்றுள்ள பயிர்க்கடன்கள் 100 சதவிகிதம் முழுமையாகவும், 75,000 ரூபாய் முதல் 1,00,000 ரூபாய் வரை பெற்றுள்ள பயிர்க்கடன்களுக்கு அதிகபட்சமாக 75,000 ரூபாய் வரையும், 1,00,000 ரூபாய்க்கு மேல் பெற்றுள்ள பயிர்க்கடன்களுக்கு அதிகபட்சமாக 35,000 ரூபாய் வரையும் தள்ளுபடி வழங்கப்படும்.

இதன்மூலம் 75,000 ரூபாய் முதல் 1,00,000 ரூபாய் வரை பயிர்க்கடன் பெற்றுள்ள 2,38,264 விவசாயிகளுக்குத் தலா 75,000 ரூபாய் வரை தள்ளுபடி வழங்கப்படும். இதனால், ஏற்கெனவே, பெற்ற தள்ளுபடித் தொகைக்கு மேலாக 40,000 ரூபாய் வரை கூடுதல் தள்ளுபடி பெறும் வாய்ப்பு ஏற்படும். இந்தக் கூடுதல் பயிர்க்கடன் தள்ளுபடியால் அரசுக்கு சுமார் ரூ.953.06 கோடி கூடுதல் நிதிச்சுமை ஏற்படும். இருந்தாலும், தமிழக விவசாயிகளின் நலனில்தான் நமது நலன் உள்ளது என்று கருதி சுமார் 13.34 இலட்சம் விவசாயிகளுக்கு மொத்தமாக ரூ.6,220 கோடி பயிர்க்கடன் தள்ளுபடியை இந்த அரசு வழங்குகிறது.

2026–2027–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்:– தொடர்ச்சி....

2. **திரு. க. பாலமுருகன்**
3. **திரு. ந. தளவாய் சுந்தரம்**
4. **திரு. P. ரேவந்த் சரண்**
5. **திரு. த. சாமிநாதன்**
6. **திரு. முக்கூர் N. சுப்பிரமணியன்**
7. **திரு. க. வைத்திலிங்கம்**
8. **திரு. NSN. நடராஜ்**
9. **டாக்டர் இரா. இலட்சுமணன்**
10. **திரு. ஈசிஆர். பி. சரவணன்**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மற்றும் மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோர் பதிலுரை வழங்கினார்கள்.

மானியக் கோரிக்கை எண்.41 – வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மீது சட்டமன்ற உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.41 – வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின்கீழ் கோரிய தொகைகள் வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்து துயர் தணிப்பு துறையின்மீது சட்டமன்ற உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்து துயர் தணிப்பு துறையின்கீழ் கோரிய தொகைகள் வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

...8

மானியக் கோரிக்கை எண்.19 – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின்மீது சட்டமன்ற உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.19 – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் கோரிய தொகைகள் வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

பேரவை பிற்பகல் 4.37 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் **2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை** காலை 9.30 மணிக்குக் கூடும்.

**இரா. சாந்தி,**
**செயலாளர்.**